1970 செப்டம்பர் 1]

கிராம அதிகாரி மீதான கோப்பு இழப்பு.

* 168 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையிலுள்ள கோட்டாட்சித் தலைவர் Sub-Collector அலுவலகத்திலிருந்து கிராம அதிகாரி ஒருவரின் மீதான குற்றக்கோவைக் கட்டு (charge memo file) 1969-ம் ஆண்டில் காணாமல் போக்கடிக்கப் பட்டது பற்றி அரசுக்கு தெரியுமா ?

(இ) ஆமெனில், சமபந்தப்பட்டோர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டாட்சி அலுவலகத்திலிருந்து கிராம அதிகாரி ஒருவரின்மீதான குற்றக்கோவைக் கட்டு 1969-ம் ஆண்டில் காணாமற் போக்கடிக்கப்படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

பரிசுச்சிட்டுகள் விற்பனை.

தனி உறுப்பினர் கேள்வி எண் 1.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என் கேள்வியை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி உறுப்பினர்களுக்கு சர்குலேட் செய்யப்படவில்லை. ஆகவே, அதைப் படித்து விடுங்கள்.

THIRU P. G. KARUTHIRUMAN : Will the Hon. Minister for Finance be pleased to state—

(a) The amount collected throgh selling lottery tickets from October 1969 to 31st March 1970 (Gross collections);

(b) The amount spent by way of prizes in that period;

(c) The net income of Government through lotteries during that period;

(d) The total amount of expenditure during this period for Agentscommission and Government' special employees engaged in selling tickets;

(e) The expenditure on advertisements and all other miscellaneous items of expense; and

(f) The total expenditure on salaries of officers and staff exclusively engaged in the lotteries department.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுதுதான் பைலைக் கொடுக்கிறார்கள். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு ஆன்சர் பண்ணுவார்கள். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

சேலத்திலும் திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பது குறித்து அமைச்சர்கள் தெரிவித்த மாறுபட்ட கருத்துக்கள் பற்றி

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, ஆர்டர் ஆப் தி ஹவுஸை மாற்ற வேண்டும் என்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, பத்திரிகைச் செய்தியில், மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கோவையில் பேசிக் கொண்டிருந்த விழாவிலே "நான்காவது திட்டத்திலே சேலத்திலும், திருச்சியிலும் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு கல்வி அமைச்சரவர்கள் அப்படிக் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். பிரஸ் கான்பரன்சில், நிதி அமைச்சரவர்களும், கல்வி அமைச்சரும் சேர்ந்து சொன்னார்களா ? இப்படிப்பட்ட பெரிய கொள்கையிலே, திட்டத்திலே, நிதி அமைச்சர் நிதியைக் கொடுக்கிறவர்; கல்வி அமைச்சர் அதை ஏற்றுக் கொள்கிறவர். இவற்றில் எது உண்மை ? மந்திரிகளுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கிறது என்பதற்கு இது அடிப்படையா? பொது மக்களாகிய நாங்கள் இதனால் கஷ்டப்படுகிறோம். எது உண்மை? எது தவறு? சர்க்காருடைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டுமே உண்மை என்பதுதான் அரசின் நிலை. (சிரிப்பு) (குறுக்கீடு) ஆமாம், இடையிலே ரொம்பப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பொழுது போக்காக மந்திரிகளிடம் தகராறு; கட்சிக்குள்ளே தகராறு என்பார்கள். எந்தவிதமான நிலையும் அப்படியில்லை. இரண்டும் உண்மைதான். ஆனால், பத்திரிகைகளில் தங்களுக்குத் தகுந்தவாறு போட்டிருக்கிறார்கள். அவர்கள் போட்ட முறையிலே, பாவனையிலே வித்தியாசம். கோவையில் நான் மருத்துவக் கல்லூரிக் கட்டடத்தை திறந்து வைக்கும்போது, சேலத்திலும், திருச்சியிலும், இரண்டு மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான " பிரபோஸல்ஸ் " திட்டங்கள் நான்காவது திட்டகாலத்தில் உருவாக்கப்படும். இரண்டு கல்லூரிகள் திறக்கப்படும் என்று சொன்னேன். அரசாங்கத்தின் உண்மை நிலையும் அதுதான். நான்காவது திட்டத்தின் இரண்டாவது வருடத்தில் இருக்கிறோம். அந்தக் காலத்திற்குள் திறக்கும் திட்டங்கள், செயற்குறிப்புகள் இருக்கின்றன. பேசுகிற போது, காரணம் சொன்னேன், கோவைக்கு கல்லூரி வருவதற்கே இவ்வளவு காலம் ஆயிற்று. வருடத்திற்கு ரூ. 50 லட்சம் ஆகிறது. டெல்லியிலிருந்து பணம் கொடுப்பதில்லை.